Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 39/2023

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | சும்மா இருக்கிறேன் |
| பெயர் | - | நந்தகுமார். | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முருகன் | சமயம் | - | |
| கிராமம் | - | சின்கோனா 1-வது டிவிசன் | வயது | - | 24 |
| சாதி | - | | | | |

**06.02.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் சின்கோனா 1-வது டிவிசனில் வசித்து சும்மா இருக்கிறேன். 19.01.2023-அன்று நானும், மகேஷ், மணி, அஸ்வின் ஆகியோர் மாலை 06.00 மணியளவில் வால்பாறையிலிருந்து சின்கோனாவிற்கு ஸ்கூட்டி வண்டியில் சென்றோம். வேகமாக போய்க் கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி மணிகண்டன் வண்டியை ஓட்டினார்.

2. போகும்போது சிறுகுன்றாவில் கோவில் ஒன்று உள்ளது. அதைத்தாண்டி போய்க்கொண்டிருக்கும்போது அப்படியே விழுந்துவிட்டோம். விழுந்ததில் எனது இடது கால் முட்டியில் அடிபட்டு வீங்கிவிட்டது. மணிக்கு நெஞ்சில் அடிபட்டது. அஸ்வினுக்கு காலில் அடிப்பட்டது. மகேஷ் உள்காயம் ஏற்பட்டு அப்படியே விழுந்துவிட்டார். சிறுகுன்றாவிலிருந்து வால்பாறைக்கு ஒரு கார் வந்தது. அதில் மணி, அஸ்வின், மகேஷ் ஆகியோரை ஏற்றிவிட்டு வால்பாறை ஆஸ்பத்திரிக்கு போனார்கள். நான் அப்படியே வீட்டிற்குப் போய்விட்டேன்.

3. நானும் சின்கோனாவில் உள்ள ஆஸ்பிட்டலுக்கு போய்விட்டு வீட்டிற்குப் போய்விட்டேன். நான் மறுநாள் காலையில் வால்பாறை ஆஸ்பத்திரிக்கு போய் நடக்க முடியாததால் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தேன். பயப்படற அளவுக்கு ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டார்கள். இரவு மகேஷ் வால்பாறை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார்.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார்**

**அ.சா.ஆ. 1 ஆகும்.** அதை சின்கோனாவில் கொடுத்தேன். போலீஸ் ஸ்டேசனில் இருந்து வந்து எழுதிக்கொண்டு போனார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**:

1. புகாரிலுள்ள கையெழுத்து மட்டும்தான் என்னுடையது. அதில் என்ன எழுதியிருந்தது என்று படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் பெயர், அட்ரஸ் மட்டும் கேட்டு எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. நான் சம்பவம் எப்படி நடந்தது என்ற விவரம் அவர்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் ஒரே ஸ்கூட்டியில் நாலு பேர் சென்றதால் மெதுவாகத்தான் போகமுடியும். அந்தநேரத்தில் கேபிள் கட் ஆகி முன்னாடி வீலில் சுற்றி கீழே விழுந்தோம் என்றால் ஆமாம்.

3. இந்த விபத்திற்கு ஆஜர் எதிரி காரணமில்லை என்றால் சரிதான். கேபிள் கட் ஆகி முன்னாடி வீலில் சுற்றி கீழே விழுந்தோம் என்று போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 39/2023

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கல்லூரி படிப்பு |
| பெயர் | - | அஸ்வின் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜன் | சமயம் | - | |
| கிராமம் | - | ரொட்டிக்கடை | வயது | - | 19 |
| சாதி | - | | | | |

**06.02.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் ரொட்டிக்கடையில் வசித்து வால்பாறை அரசு கலைக்கல்லூரியில் B.A முதலாமாண்டு படித்து வருகிறேன். 19.01.2023-அன்று நான் ரொட்டிக்கடையிலிருந்து வால்பாறைக்கு ஸ்கூட்டியில் வந்துகொண்டிருந்தேன். மகேஷ் அண்ணனைப் பார்த்தோம். பொட்டானிக்கல் கார்டனைப் பார்த்தோம்.

2. மணிகண்டன் அண்ணனுக்கு பஸ் போய்விட்டது. அதனால் ஸ்கூட்டியில் சின்கோனாவிற்கு விடப்போனோம். ஸ்கூட்டியில் நான், நந்தகுமார், மணிகண்டன், மகேஷ் ஆகியோர் சென்றோம். வண்டியை ஆஜர் எதிரி ஓட்டினார். சிறுகுன்றா மாட்டுப்பட்டி பஸ்ஸ்டேன்ட் அருகே சென்றபோது ஆக்சிலரேட்டர் கேபிள் கட்ஆகி முன்னாடி வீலில் சுற்றி விட்டது. அப்படியே கீழே விழுந்துவிட்டோம். அதில்எனக்கு இடது காலில் அடிப்பட்டது.

3. மகேஷ் அப்படியே ரோட்டில் தலைக்குப்புற விழுந்துவிட்டார். மணிகண்டனுக்கு நெஞ்சிலும் காலிலும் அடிப்பட்டுவிட்டது. நந்தகுமாருக்கு காலில் லேசாக அடிப்பட்டு விட்டது. டுரிஸ்ட் காரில் நான் மணிகண்டன், மகேஷ் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். எனக்கும் மணிகண்டனுக்கும் காலில் ஆயின்மண்ட் போட்டு சிகிச்சை அளித்தனர்.

4. பின்னர் இரவு 07.45 மணிக்கு மகேஷ் மருத்துவமனையில் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. ஸ்கூட்டி என்னுடையது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு ஆஜர் எதிரி காரணமில்லை, கேபிள் கட் ஆகி முன்னாடி வீலில் சுற்றியதுதான் என்றால் சரிதான். கேபிள் கட் ஆகி ஓட்டமுடியாத நிலையில் சரிசெய்துதான், RTO ஆபிஸில் காட்டினோம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.